ரூபாய் செலவாகும் என்று சொல்லப்பட்டதால் அவ்வளவு செலவு செய்து அதை மீண்டும் செயல்படுத்துவது மிகவும் கடினமானதாக இருக்கும் என்பதால் தான் அது மூடப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[(குறிப்பு)—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2. அறிவிப்புகள்.

(அ) மதுரை காமராஜ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் மதுரை காமராஜ் பல்கலைக்கழகப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற நான்கு உறுப்பினர்களின் பதவிக் காலம் 30—10—1981-ல் முடிவடைந்து விட்டதால் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்கு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப் பெற்றுள்ளது :—

(1) திரு. சி. த. சிதம்பரம்

(2) திரு. ஏ. சந்திரசேகரன்

(3) திரு. வி. பாலகிருஷ்ணன்

(4) திரு. ஆர். டி. கோபாலன்

முறைப்படி நியமனம் செய்யப்படவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் மேற்கண்ட நால்வரும் மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பேரவைக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்று நான் அறிவிக்கிறேன்.